பத்திரிக்கை செய்தி

விவசாய நிலத்திற்கு உட்பிரிவு பட்டா வழங்க ரூ.10,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய சர்வேயர் கைது

புகார்தாரர் திரு.கோபி, தாசிரப்பள்ளி கிராமம், வேப்பனப்பள்ளி தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனது தந்தைக்கு சொந்தமாக உள்ள விவசாய நிலத்திற்கு உட்பிரிவு பட்டா வழங்க நில அளவை பிரிவிற்கு கிருஷ்ணகிரி மாவட்ட சார்பதிவாளர் அலுவலகம் மூலமாக விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.கௌதமன், சர்வேயர், நில அளவை பிரிவு, சார் பதிவாளர் அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம் தனக்கு ரூ.10,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கிருஷ்ணகிரி மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 03.06.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.கௌதமன், சர்வேயர் அவர்கள் லஞ்ச பணம் ரூ.10,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.